ந.க.எண்:பிஇ4/2382/2020 மாவட்ட ஆட்சியரகம் (சத்துணவு)
நாள்: .09.2020 விழுப்புரம்

# பத்திரிக்கை செய்தி

விழுப்புரம் மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி பகுதிகளில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.** விண்ணப்பிக்கும் காலி பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையேயான தூரம் 3 கி.மீக்குள் இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **சத்துணவு அமைப்பாளர் பணியிடத்திற்கான தகுதிகள்** | | |
| 1) | பொதுப்பிரிவு **(General)** மற்றும் பட்டியல் இனத்தவர் **(S.C)** | கல்வித் தகுதி – 10ஆம் வகுப்பு தேர்ச்சி. வயது - 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| 2) | பட்டியலின பழங்குடியினர் **(S.T)** | 8ஆம் தேர்ச்சி (அ) தோல்வி பெற்றிருக்கவேண்டும். 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| **.சமையலர் பணியிடத்திற்கான தகுதிகள்** | | |
| 1) | பொதுப்பிரிவு **(General)** மற்றும் பட்டியல் இனத்தவர் **(S.C)** | கல்வித் தகுதி – 8ஆம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி. வயது - 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| 2) | பட்டியலின பழங்குடியினர் **(S.T)** | எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும். 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| **சமையல் உதவியாளர் பணியிடத்திற்கான தகுதிகள்** | | |
| 1) | பொதுப்பிரிவு **(General)** மற்றும் பட்டியல் இனத்தவர் **(S.C)** | கல்வித் தகுதி – 5ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர்கள் வயது - 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| 2) | பட்டியலின பழங்குடியினர் **(S.T)** | எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |

வயது வரம்பு 01.07.2020 அன்றைய தேதியின்படி, **விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கு 20 வயது முதல் 40 வயதிற்குட்பட்டும், மாற்றுத்திறனாளிகளுக்கான உச்ச வரம்பு 43 வயது வரையிலும் இருக்கவேண்டும்.**

Scanned with CamScanner

காலிப்பணியிடங்கள் மற்றும் அதற்கான இடஒதுக்கீடு உள்ளிட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகம் / நகராட்சி அலுவலகங்களில் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பிக்கும் பள்ளி சத்துணவு மையம் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதியாக இருப்பின் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரிடமும், நகராட்சி பகுதிகளாக இருப்பின் நகராட்சி ஆணையரிடமும் **30.9.2020 மாலை 05.00 மணி** வரை தகுதியுடைய நபர்கள் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். 30.09.2020 மாலை 05.00 மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

தகுதி உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்முக தேர்வு நடைபெறும் நாள் விவரம் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்படும்.

பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் கல்வித் தகுதி சான்றிதழ், வயது சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிடச் சான்றிதழ், மாற்றுத்திறனாளி சான்றிதழ் அல்லது அடையாள அட்டை மற்றும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவராயின் அதற்கான சான்றிதழ்களின் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்கள் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.

இந்நேரடி நியமன நடவடிக்கைகள் அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் இறுதி முடிவுக்கு உட்பட்டவையாகும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
விழுப்புரம்.
22/9/2020.

22/09/2020

Scanned with CamScanner